உ
சிவமயம்

# திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய
# கோளாறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழன்வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவை மார்பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனியொளி நீறணிந்து உமையோடும்
வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமிதிசை
தெய்வமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் எங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

வாள்வரிய தள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாகவிடை
யேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம்மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும்
எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமா லும்மறை யோடுதேவர்
வருகாலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்நல்கு குணமாய
வேட விகிர்தன்
மத்தமு மதியுநாகம் முடிமேலணிந் தென்
உளமே புகுந்த அதனால்
புத்த ரொடமனை வாதிலழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொளாலை விளைசெந் நெல்
துன்னிவளர் செம்பொன்எங் கும்நிகழ
நான்முக னதியாய பிரமாபுரத்து மறைஞான
ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத
வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

★★★★★